மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

நிலையறிபரீட்சை – 2021

செய்முறைத் தொழிநுட்பத் திறன்கள் –I,II

பெயர் ∴ சுட்டெண் :-	தரம் :- 7	நேரம் :- 2 மணித்தியாலம்

பகுதி 1

1. குறுங்காலப் பயிருக்கு உதாரணம் தருக
   1. வாழை 2. தக்காளி 3. மாதுளை 4. மா

2. சிதைவடையாத கழிவுப் பொருளாக அமைவது?
   1.காய் கனிகளின் தோல்கள் 2.பிளாஸ்ரிக் குடிநீர்ப் போத்தல்கள்
   3.தேங்காய்ப்பூ 4.உணவுக் கழிவுகள்

3. கூடை முறையில் கூட்டெரு தயாரிப்பதற்கு கிளிரிசிடியாக் கம்புகள் நடப்படும் நிலத்தின் விட்டம் யாது?
   1. 30cm 2. 45cm 3. 60cm 4. 75cm

4. நாற்று மேடையைப் பயன்படுத்தி நாற்றுக்களை நடுகை செய்யும் பயிர்?
   1. கத்தரி 2. வெண்டி 3.பயிற்றை 4.புடோல்

5. மண்ணரிப்பைத் தடுப்பதற்கான உயிரித் தடையாக அமைவது?
   1. காற்றுப்பாயிடல் 2.சாக்கு இடுதல்
   3. கிளிசிரிடியா வேலியமைத்தல் 4.பொலித்தீன் தாளிடல்

6. நாற்றுமெடை ஊடகத்தின் மேல்மண், கூட்டெரு ஆகியவற்றின் வீகிதம் யாது?
   1. 1:1 2. 1:2 3. 2:1 4. 1:4

7. நாற்றுமேடைப் பயிர்களுக்கு நீர் வழங்க பொருத்தமான உபகரணம்?
   1. நீர்க்குழாய் 2. பூவாளி 3. கால்வாய்(வாய்க்கால்) 4. வாளி

8. தரை அலங்கரிப்பின் போது பற்றையாக வளரும் தாவரங்களில் ஒன்று
   1. கொன்றை 2. விளாத்தி 3. கொய்யா 4. நித்தியகல்யாணி

9. தரை அலங்கரிப்பின் போது பயன்படுத்தப்படும் பூக்கும் தாவரங்களில் ஒன்று
   1. கலேதியா 2. இலைஅலங்காரச்சேம்பு 3. போகன்விலா(கடதாசிப்பூ) 4 பன்னந்தாவரம்

10. வீட்டுவளவில் பாதுகாப்பிற்காக வளர்க்கப்படும் விலங்குகளில் ஒன்று
    1. நாய் 2. எருது 3.முயல் 4. மாடு

11. முட்டையிடும் கோழிகளுக்கான தீன் கலவையாக அமைவது?
    1. சிக்மாஷ் 2. குறோவர்ஸ் மாஷ் 3. லேயர்ஸ் மாஷ் 4. மேற்கூறிய யாவும் பிழை

12. நிலக்கீழ்த் தண்டுத்துண்டங்களின் மூலம் புதிய நாற்றுக்களைப் பெற உதவுவது?
    1. வெங்காயம் 2. வல்லாரை 3. உருளைக்கிழங்கு 4. இஞ்சி

www.lkedu.lk

13. விலங்குகளின் உடல் வளர்ச்சிக்கான போசணை?
    1. காபோவைதரேற்று 2. புரதம்
    3. கொழுப்பு 4. விற்றமின்களும் கனியுப்புக்களும்

14. தரை அலங்கரிப்பில் பயன்படும் மென்கூறுகளில் ஒன்று?
    1. கருங்கல் 2.பறவைகள் 3. கூழைக்கல் 4. படிக்கல்

15. விலங்குகளுக்கு வழங்கப்படுகின்ற ஐதுத்தீன் வகைகளில் ஒன்று?
    1. அரசித்தவிடு 2.தேங்காய்ப்பிண்ணாக்கு 3.கிளிசிரிடியாக்கிளை 4.மீன்தூள்

16. முட்டை உற்பத்திக்கான கோழிகளின் வளர்ச்சிப் பருவங்கள் எத்தனை?
    1. 4 2. 3 3. 2 4.1

17. சரியான முறையில் வெப்பமேற்றப்பட்ட எண்ணெயில் பொரிக்கப்பட்ட உணவுகளின் பண்பாக அமைவது?
    1. வேகாத நிலை காணப்படும் 2. பொன் நிறமாகக் காணப்படும்
    2. கடின இழையமைப்பாகக் காணப்படும் 4. கருகிய மணம் வீசும்

18. உணவு சமைப்பவர் பினபற்ற வேண்டிய நடைமுறையானது?
    1. மேலங்கி(Apron) அணிதல் 2. தலைக்கவசம் அணிதல்
    2. கையுறை அணிதல் 4. மேற்கூறிய யாவும் சரி

19. உணவு சமைத்தலின் போது கரட் ,பீற்றூட் போன்றவற்றை சீவுதலுக்கு பயன்படும் உபகரணம்?
    1. வடிகட்டி 2.கிறேற்றர் 3. அரிதட்டு 4. வெட்டுப்பலகை

20. இலத்திரனியல் துணைக் கூறுகளில் உலர்கலத்திற்கு வழங்கப்படும் குறியீடு?



❖ 21 தொடக்கம் 25 வரையான கூற்றுக்கள் சரியாயின் “சரி” எனவும் பிழையாயின் “பிழை” எனவும் அடைப்புக்குறிக்குள் எழுதுக.

21. தொடர்ச்சியாகப் பயிர் செய்வதனால் மண்ணிலிருந்து போசணை மூலகங்கள் இழக்கப்படுவதில்லை (……..)

22. உணவுதயாரிப்பில் இலைவகைகள், கோவா, சலாது போன்றவற்றைக் கழுவி நீரை வடிய விட கொலண்டர் பயன்படுகிறது (…….)

23. உணவு சமைத்தலில் நீராவியில் அவித்தலில் பிட்டு, இட்லி என்பனவற்றுக்கு மறைமுக வெப்பம் பயன்படுத்தப்படுகிறது. (……..)

24. உலர்கலத்தின் இரு முனைவுகளிலும் நேர்(+) ,மறை(-) எனக் குறிப்பிடப்பட்டிருக்கும். (……...)

25. கொள்ளளவியின் மூலம் மின் தற்காலிகமாகக் களஞ்சியப்படுத்தி வைக்கப்படும். (…….)

(25 x 2 = 50 புள்ளிகள்)

www.lkedu.lk

பகுதி 11

முதலாம் வினா உட்பட நான்கு வினாக்களுக்கு விடை தருக

1. மண் வளத்தை நிலைபேறானதாக பயன்படுத்துவது அனைவரதும் கடமையாகும்.
   1) பயிர்களுக்கு கூட்டெரு இடுவதன் நன்மைகள் இரண்டு தருக.
   2) 3R எண்ணக்கருக்களுள் இரண்டைத் தருக.
   3) கழிவுப்பொருட்களின் இரண்டு வகைகளும் எவை?
   4) கணினியின் துணையுடன் பயிர்ச்செய்கைப் படிவம் தயாரிக்கப் யன்படுத்தக்கூடிய மென்பொருள் ஒன்றின் பெயரைத் தருக.
   5) நாற்றுமெடை தயாரிக்கப் பயனபடுத்தும் படிமுறைகள் நான்கு தருக.

   (4+4+4+4+4 =20 புள்ளிகள்)
2. வீட்டுச் சூழலை சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருப்பதற்கு தரையலங்கரிப்பு பயன்படுகிறது
   1) தரையலங்கரிப்புக்கு பயன்படும் பிரதான கூறுகள் இரண்டும் எவை?
   2) தரையலங்கரிப்பு முறைகள் இரண்டும் எவை?
   3) பாடசாலை வளவை அலங்கரிக்கும் போது கவனத்தற்கொள்ள வேண்டிய விடயங்கள் மூன்று தருக.
   4) தரையலங்கரிப்பில் தாவரங்களைப் பயன்படுத்துவதன் நோக்கங்கள் மூன்று தருக

   (2+2+3+3 = 10 புள்ளிகள்)
3. எமது போசணைத் தேவைகளை நிறைவேற்றுவதில் விலங்கு உற்பத்திப் பொருட்கள் பெரும் பங்களிப்புச் செய்கின்றன.
   1) விலங்கு உற்பத்திப் பொருட்களைப் பெறுவதற்காக வீட்டில் வளர்க்கும் விலங்குகள் இரண்டு தருக
   2) வயது அடிப்படையில் விலங்குகளின்(ஆடு,மாடு,கோழிபோன்ற) வளர்ச்சிப் பருவங்கள் இரண்டு தருக
   3) வீட்டுவளவில் விலங்குகளை வளர்ப்பதால் கிடைக்கும் நன்மைகள் நான்கு தருக.
   4) வீட்டுவளவில் விலங்குகளை வளர்க்கும் போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கு தருக.

   (2+2+3+3 = 10 புள்ளிகள்)
4. சமையலறை வீட்டின் இருதயம் போன்றது ஆகவே உணவுப்பொருட்கள் ,கருவிகள் ,உபகரணங்கள் என்பன சிறப்பாகப் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும்.
   1) உணவு சமைப்பவர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் இரண்டு தருக.
   2) சமையலறையில் கத்திவகைகள் பயன்படுத்தப்படும் வெவ்வேறு சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.
   3) சமையலறை அமைக்கும் போது கவனிக்க வேண்டிய பிரதான விடயங்கள் மூன்று தருக.
   4) உணவுத் தயாரிப்பில் கருவிகளும் உபகரணங்களும் பயன்படுத்தும ் போது கவனத்தில் ் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் மூன்று தருக.

   (2+2+3+3 = 10 புள்ளிகள்)
5. சமைக்கும் பல்வேறு முறைகளுக்கேற்ப உணவின் சுவை, தரம், மணம், இழையமைப்பு, பருமன் என்பன வேறுபடுகின்றன.
   1) உணவை வெப்பமூட்டுவதன்(சமைப்பதன்) மூலம் கிடைக்கும் பயன்கள் இரண்டு தருக.
   2) கனலடுப்பில் தயாரிக்கப்படும் உணவு வகைகள் இரண்டு தருக.
   3) உணவு சமைக்கும் முறைகள் மூன்று தருக.
   4) சமைக்கப்பட்ட உணவைப் பரிமாறும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் மூன்று தருக.

   (2+2+3+3 = 10 புள்ளிகள்)
6. மின்னைக் கட்டுப்படுத்துவதற்கும் பயன்படுத்துவதற்கும் பல்வேறு மின்துணைக்கூறுகள் பயன்படுத்தப்படுகின்றன.
   1) எளிமையான மின்சுற்றினை உருவாக்கப் பயன்படும் கணினி மென்பொருள் யாது?
   2) அழுத்தும் பொத்தான் ஆளி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.
   3) மின்கட்டுப்பாட்டுத் துணைக்கூறான தடையியின் தொழிற்பாட்டைத் தருக.
   4) பின்வரும் மின் துணைக்கூறுகளின் குறியீடுகளை வரைக.
      1. மின்மோட்டர் 2. ஒலிபெருக்கி 3. உலர்கலம் 4. மின்குமிழ்

   (2+2+2+4 = 10 புள்ளிகள்)

www.ketu.lk